**சுருக்கம்**

வணிகவரித்துறை – தமிழ்நாடு வணிகர்நல வாரியம் – நலிவுற்ற வாரிய உறுப்பினர்களுக்கு பெட்டி கடை வாங்கவும் அல்லது மூன்று சக்கர மிதிவண்டி வாங்கவும் நிதியுதவி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை

அரசாணை (2டி) எண்.99 நாள் : 2.07.2007

படிக்கப்பட்டது

தமிழ்நாடு வணிகர்நல வாரிய முதன்மை செயல் அலுவலர் கடித எண். வநவா/203/2007, நாள் 25.04.2007.

–oOo–

ஆணை:

நலிவுற்ற வணிகர்களுக்கு கூட்டுறவுத் தொழிற்கூடங்களில் தயார் செய்யப்படும் பெட்டிக்கடை வாங்கவும், அல்லது மூன்று சக்கர மிதிவண்டி வாங்கவும் பின்தங்கிய மாவட்டங்களாகக் கருதப்படும் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலிருந்து மட்டும் வரும் விண்ணப்பங்களுக்கு தற்பொழுது ரூ.10000/– வழங்கப்பட்டு வருகிறது. இதனை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி ஒவ்வொரு ஆண்டுக்கும் முதலில் பெறப்படும் 10 விண்ணப்பங்களுக்கு மட்டும் இத்திட்டத்தின்கீழ் ரூ.10000/– வீதம் வழங்கப்படும் என 2007–2008 ஆம் ஆண்டு வணிகவரிகள் குறித்த மானியக் கோரிக்கையின்போது, சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

2. பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்கண்ட அறிவிப்பு குறித்து வாரிய முதன்மை செயல் அலுவலர் அவர்கள் கீழ்க்கண்டவாறு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

> 30.01.1996 அன்று நடைபெற்ற வாரியத்தின் 6–வது கூட்ட தீர்மான எண்.8–ன்படி வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள வணிகர்கள் தங்களுடைய வியாபாரத்தில் நலிவுற்ற வியாபாரம் நடத்த முடியாத சூழ்நிலையில் உள்ளவர்கள், வாரியத்திடம் உதவி கோரினால், அவர்களுக்கு பெட்டிக் கடை வாங்கி கொடுப்பது பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. இறுதியில், பின்தங்கிய மாவட்டங்களான திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட தாலுக்கா, தலைநகரங்களிலிருந்து வரும் விண்ணப்பங்களில் ஆண்டிற்கு 10 உறுப்பினர்களுக்கு தலா ஒரு உறுப்பினருக்கு ரூ.10000/–க்கு மேற்படாமல் கூட்டுறவு நிறுவன தொழில் கூட்டத்தில் தயார்

செய்யப்படும் பெட்டிகடைகளை வழங்கலாம் என இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றும் 27.02.2001 அன்று நடைபெற்ற வாரியத்தின் 9–வது கூட்டத்தில் மேற்கூறியவாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கண்டுள்ளவாறு இந்த நிதியுதவி இதுவரை எவருக்கும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் 13.03.2007 அன்று நடைபெற்ற 10–வது வாரியக் கூட்டத்தில் இதுவரை திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலுள்ள நலிவடைந்த வணிகர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கலாம் என முடிவு மேற்கொள்ளப்பட்டது என்றும் இவ்வுதவி பெற நலிவுற்ற வணிகர்கள் நிதியுதவி வழங்கக் கோரும் விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு அலுவலகம் மூலமாக (1) உறுப்பினர் சான்று (2) விண்ணப்பதாரரின் வருமானச் சான்று (உரிய வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டது), (3) விண்ணப்பதாரரின் குடும்பத்தின் தற்போதைய வருமானம், பொருளாதாரம் மற்றும் வறிய நிலை (விண்ணப்பதாரரின் வியாபாரம், பிற வருமானம் குறித்து ஆய்வு செய்யும்போது உறுப்பினர் வருமான வரி செலுத்தும் அளவிற்கு பொருளாதார நிலை உள்ளவரா) போன்றவைகள் குறித்து வரிவிதிப்பு அலுவலரால் கூர்ந்தாய்வு செய்து வழங்கப்பட்ட சான்று ஆகியவைகளுடன் உரிய வரிவிதிப்பு அலுவலர், விண்ணப்பத்தினை ஆய்வு செய்து, தகுந்த பரிந்துரையுடன் பெறப்பட்டு பரிசீலிக்கப்படுகிறது என்றும் இவருக்கு வழங்கப்படும் ரூ.10000/– உதவித் தொகையை இவர் கூட்டுறவு நிறுவன தொழில் கூடத்தில் தயார் செய்யப்படும் பெட்டிக் கடையினை கொள்முதல் செய்து வணிகம் மீண்டும் தொடங்கியதற்கான சான்று நிதி உதவி பெற்ற ஒரு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்றும் இதனையும் வணிகவரி அலுவலர் சரிபார்த்து அறிக்கை அனுப்ப வேண்டும் என்றும் மேற்காணும் நிபந்தனைகளுடன் நலிவுற்ற வணிகர்களுக்கான நிதி உதவி வழங்கப்படுகிறது என்றும் எனவே, வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலிவுற்ற வணிகர்களுக்கான நிதி உதவியினை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் வரிவுபடுத்தி வழங்கும்பொருட்டு, மேற்கண்ட விவரங்களை கருத்தில்கொண்டு உரிய அரசாணையினை விரைவில் பிறப்பிக்க ஆவன செய்யுமாறும் இவ்வரசாணை வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர் பெறப்படும் மனுக்களுக்கு இவ்வாரியத்தின் மூலமாக நலிவுற்ற வணிகர்களுக்கான நிதி உதவி ஆண்டொன்றுக்கு முதலில் பெறப்படும் 10 விண்ணப்பங்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.10000/– வீதம் வழங்கினால், ஆண்டிற்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவினம் ஏற்படும் என்றும் இச்செலவினை தற்போது வாரிய கணக்கில் உள்ள இருப்புத் தொகையிலிருந்து வழங்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. முதன்மை செயல் அலுவலரின் கருத்தினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று, மேலே பத்தி 2–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் இவ்வரசாணை வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர், இவ்வாரியத்தின் மூலமாக நலிவுற்ற வணிகர்களுக்கான நிதி உதவி கோரி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் முதலில் பெறப்படும் 10 விண்ணப்பங்களுக்கு கூட்டுறவு தொழிற்கூடங்களில் தயார் செய்யப்படும் பெட்டி கடை வாங்கவும் அல்லது மூன்று சக்கர மிதிவண்டி வாங்கவும் நபர் ஒன்றுக்கு ரூ.10000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)

வீதம் ஒவ்வொரு ஆண்டும் வழங்க அரசு ஆணையிடுகிறது. இந்த ஆணை உடனடியாக அமலுக்கு வருகிறது. இச்செலவினத்தை தமிழ்நாடு வணிகர் நல வாரியம் ஏற்கும்.

4. இது குறித்து தொடர் நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைச் செயல் அலுவலர் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். தேவராஜ்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு வணிகர் நல வாரியம், சென்னை–5.
வணிகவரி ஆணையர், சென்னை–5.
மாநிலக்கணக்காயர், சென்னை–6/9/18/35.
வணிகவரித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.

நகல்

நிதித்துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.